**ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் வருமான செலவினக் கணக்கு மற்றும் பொருன்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களில் உரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1953 இன் 44 இலக்க பாடசாலை சார்ந்த ஆசிரியர்களின் ஓய்வூதிய கட்டளைச் சட்டத்தின் 5 மற்றும் 9 பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்ட பிரமாணங்களில் 6(1) பிரிவு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் ஊடாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இவ் அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- கணக்காய்விற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்படுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிதியத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்,

- நிதியம் தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்,

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 1953 இன் 44 ஆம் இலக்க பாடசாலை ஆசிரியர்களின் ஓய்வூதியச் சட்டத்தின் | | | |
| (i) கட்டளை இலக்கம் 04 | ஆசிரியர்களின் விதவைகள், அநாதைகள் பங்களிப்புக்களிலிருந்து நிதியமொன்று ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் ஆசிரியர்களின் விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் செலுத்தப்படல் வேண்டிய போதும், பங்களிப்புத் தொகை சேகரிப்பு மற்றும் செலுத்துவதற்காக நிதியத்தின் சார்பில் தனியான வங்கிக் கணக்கொன்று பேணப்படாது இருந்ததுடன், பங்களிப்புத் தொகை ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் வங்கிக் | பிரிவெனா மற்றும் தனியார் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் வழங்கப்படுவது வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட திரண்ட நிதியத்தின் 253 ஆம் இலக்க ஒதுக்கீட்டுத் தலைப்பிலிருந்து செய்யப்படுவதால் ஆசிரியர்களின் விதவைகள் அனாதைகள் ஓய்வூதிய நிதியத்தை நிறுவப்பட்டதன் நோக்கம் நிறைவேறப்படுவதென. | சட்டத்தின் கட்டளையின் பிரகாரம் நிதியத்தை இஸ்தாபித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கிற்கு சேகரிக்கப்பட்டிருந்ததுடன் ஓய்வூதிய திணைக்களத்தின் செலவினத் தலைப்பின் கீழ் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. | | |
| (ii) கட்டளை இலக்கம் 09(அ) | ஒவ்வொரு பங்களிப்பு தொகையை செலுத்துவதற்கு தகைமை பெற்ற மற்றும் பங்களிப்பு தொகை செலுத்துனர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | மாகாணங்களிலிருந்து செலவு வைக்கப்படும் பெறுமதிகள் மாத்திரம் செலவு கட்டளைகள் ஊடாக அனுப்பப்படுவதுடன், அப் பங்களிப்பு தொகை அறவிடல் தொடர்பான விபரங்கள் அனுப்பப்படுவதில்லை. எனினும் பதிவு செய்யப்பட்ட பிரிவெனா மற்றும் அரசாங்க உதவி பெறும் தனியார் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு பாடசாலையின் பெயரில் வெவ் வேறாக அவர்களினது தகவல்கள் உள்ளடங்கப்பட்ட விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய கோவையொன்று பேணிச் செல்லப்படுவதென. | பங்பளிப்பு தொகை செலுத்துனர்கள் தொடர்பாக முறையான தகவல்கள் தொகுதியொன்று பேணிச் செல்லப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 437,633,305 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 337,692,541 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 99,940,764 ஆன முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. இம் முன்னேற்றத்திற்கு பங்களிப்புத் தொகை பெறுவனவு ரூபா 94,003,342 ஆல் அதிகரித்தமை முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உறுப்பினர்களின் பெயர், பாடசாலை, அடங்கிய உறுப்பினர் பதிவேடொன்று பராமரிக்கப்படாததால் நிதியத்திற்கு வருடாந்தம் உண்மையாகக் கிடைக்க வேண்டிய தொகை, கிடைத்த தொகை மற்றும் | அது தொடர்பாக ஆரம்ப தகவல்கள் உள்ளடக்கிய தரவு முறைமையொன்று உறுவாக்கப்பட்டு மேம்படுத்தும் பணிக்காக பிரிவெனா மற்றும் உபக்குருத பாடசாலைகளின் உதவியும் அவசியமாகும். | நிதியத்தின் உறுப்பினர்கள் தொடர்பான நாளாது வரையாக்கப்பட்ட பதிவேடொன்று பராமரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிலுவைத் தொகை, நிதிய உறுப்பினர்களின் எண்ணிக்கை, மீளாய்வாண்டில் புதிய அங்கத்துவத்தை பெற்றவர்களின் எண்ணிக்கை, நிதியத்தின் அங்கத்துவத்திலிருந்து நீக்கியவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களைச் சரியாக இணங்காண்பதற்கு முடியாதிருந்தது. | எனினும் இந்த ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் போது விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்பு நிலுவைத் தொகையைக் கணக்கிட்டு அந் நிலுவைத் தொகையை அறவிட்டதன் பின்னர் மாத்திரமே கொடுப்பனவு செய்யப்படுகின்றதென. | |
| (ஆ) | இந்த நிதியத்தினது நோக்கம் திரண்ட நிதியத்தின 253 கொண்ட ஒதுக்கீட்டு தலைப்பினால் மேற்கொள்ளப்படுவதால், இந்த நிதியம் அத்தியாவசியம் இல்லாத போதும் நிதியத்திற்குரிய சட்டங்களை திருத்த வேண்டுமென உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் அந்த உத்தேசம் இதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 07/2016 பிரகாரம் வரவுசெலவுத் திட்ட உத்தேச இலக்கம் 425 மற்றும் 426 மூலம் பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒழுங்கு முறைக்கு இணங்க நியதிச் சட்ட மற்றும் நியதிச் சட்டமல்லாத நிதியத்தை மீளாய்வு செய்து பாராளுமன்ற கட்டுப்பாட்டிற்கு கீழ்படுத்துவதனை உறுதிப்படுத்தும் பொருட்டு, பொது திறைசேரியினால் நியமிக்கப்பட்ட விஷேட குழுவொன்றினால் இந்த நிதியத்திற்குரிய சட்டங்களை திருத்தி மூடிவிட வேண்டுமென உத்தேசிக்கப்பட்ட போதும் அப் பரிந்துரைகளின் பிரகாரம் குறித்த சட்டத்தை திருத்த அல்லது நிதியத்தை மூடிவிடுவதற்கு உரிய தீர்மானம் இது வரை கிடைக்காததால் தொடர்ந்து வருடாந்தம் நிதிக்கூற்றுக்களை தயாரித்து உரியவாறு புத்தக ஏடுகளை பேணிச் செல்வதென. | சட்டங்களை திருத்துவதற்கு உரிய அதிகாரிகளிற்கு அறிவூட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |